**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 236/2019**

**வா.சா.1 – சந்தோஷ்ஜெயின்**

**29.08.2024**

**6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் ஓரளவுக்கு தெரியும். பேசினால் ஓரளவுக்கு புரிந்துகொள்வேன். சந்தோஷ்ஜெயின் , சந்தோஷ்பட்சா என்ற இரு பெயரும் என்னை சேரும் என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் ஆவணம் உள்ளது. இணை 2 சார்பதிவாளரை 25.07.2019 ல் அணுகியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது மகனுக்குத் தான் தெரியும். நான் அவ்வாறு சார்பதிவாளரை அணுகாததால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், இவ்வழக்கின் வழக்கு மூலத்திற்காக 25.07.2019 ம் தேதியன்று சார்பதிவாளரை அணுகியதாக வழக்கு மூலத்திற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது இரு பெயர்களும் ஒன்று என்பதற்கு அரசாணையில் தான் வெளியிட வேண்டுமே தவிர தாவா ஆக தாக்கல் செய்ய வேண்டுமென்றால் சரியல்ல. குறித்த வகை நிவாரணச்சட்டம் பிரிவு 26ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற கட்டணம் முறையாக செலுத்தவில்லை என்றால் சரியல்ல.காலவரையறை சட்டத்தால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.**

**சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.**

**ஒப்பம்,திருமதி,A.சுபஸ்ரீ,L.L.M.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**திருப்பூர்.**